**ஒன்பதாம் வகுப்பு – தமிழ்**

**புத்தகப் பயிற்சி**

**பாடத்தலைப்பு: இடைச்சொல் – உரிச்சொல்**

**I. கோடிட்ட இடத்தை நிரப்புக. (கையேட்டில் எழுதுதல்)**

1. பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையது இடைச்சொற்கள்.
2. இடைச்சொற்கள் தனித்து இயங்காது என்கிறார் தொல்காப்பியர்.
3. இடைச்சொல் பல வகையாக அமையும்.
4. வேற்றுமை உருபுகள் ஐ, ஆல், கு, இன், அது, கண்.
5. பன்மை விகுதிகள் கள், மார்.
6. திணை, பால், விகுதிகள் ஏன், ஓம், ஆய், ஈர்(கள்) ஆன், ஆள், ஆர், ஆர்கள், து, அ.
7. கால இடைநிலைகள் கிறு, கின்று.
8. பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் அ, உ, இ, மல்.
9. எதிர்மறை இடைநிலைகள் ஆ, அல், இல்.
10. தொழிற்பெயர் விகுதிகள் தல், அம், மை.
11. வியங்கோள் விகுதிகள் க, இய.
12. சாரியைகள் அத்து, அற்று, அம்.
13. உவம உருபுகள் போல, மாதிரி.
14. இணைப்பிடைச் சொற்கள் உம், அல்லது, ஆனால், ஆகவே, இல்லையென்றால், ஓ, ஆயினும், எனினும்.
15. தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம்.
16. சொல்லுருபுகள் மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை.
17. வினா உருபுகள் ஆ, ஓ.
18. தற்காலத் தமிழில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் இடைச்சொற்கள் உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம்.
19. 'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.

    (எ,கா)

    மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை. (எதிர்மறை உம்மை)

    பாடகர்களும் போற்றும் பாடகர் (உயர்வு சிறப்பு)

20. ஒகார இடைச்சொல் எட்டுப் பொருள்களில் வரும் என்று நன்னூல் கூறுகிறது.
21. தற்காலத்தில் ஒகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது.

(எ.கா)

இன்றைக்கு மழை பெய்யுமோ? (ஐயம்)

பூங்கொடியோ மலர்கொடியோ பேசுங்கள் (இது அல்லது அது)

பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை அதுவும் இல்லை)

22. ஏகார இடைச்சொல் ஆறு பொருள்களில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகிறது.
23. தற்காலத்தில் ஏகாரம் தேற்றப் பொருளில் (அழுத்தம்) மட்டுமே வருகிறது.

(எ.கா)

அண்ணல் காந்தி அன்றே சொன்னார். நடந்தே வந்தான்.

24. ‘தான்’ என்னும் இடைச்சொல்லும் அழுத்தப் பொருளில் தான் வருகிறது.

(எ.கா)

நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்றுதான் விழாவில் பாடினாள்.

25. ‘மட்டும்’ என்னும் இடைச்சொல் வரையறைப் பொருள் தருகிறது.

(எ.கா)

படிப்பு மட்டும் இருந்தால் போதும்.

26. ‘ஆவது’ என்னும் இடைச்சொல் பல பொருள்களில் வரும்.

(எ.கா)

ஐந்து பேராவது வாருங்கள் (குறைந்த அளவு) அவனாவது, இவனாவது செய்து முடிக்க வேண்டும். (இது அல்லது அது) முதலாவது, இரண்டாவது (வரிசைப்படுத்தல்)

27. ‘கூட’ என்னும் இடைச்சொல் குறைந்த பட்சம், முற்றுப் பொருள், எச்சம் தழுவிய கூற்று ஆகிய பொருள்களில் வரும்.

(எ.கா)

என்னிடம் ஒரு காசு கூட இல்லை. (குறைந்த பட்சம்)

தெருவில் ஒருவர் கூட நடமாட வில்லை. (முற்றுப்பொருள்)

அவனுக்கு வரையக்கூடத் தெரியும். (எச்சம் தழுவிய கூற்று).

28. ஆ என்னும் இடைச்சொல் சொற்றொடரில் எந்த சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.

(எ.கா)

நேற்று உன் நண்பனைப் பார்த்தாயா?

நேற்று உன் நண்பனயா பார்த்தாய்.

29. ஆம் என்னும் இடைச்சொல் சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.

(எ.கா)

உள்ளே வரலாம் (இசைவு)

நாளை பள்ளி விடுமுறை. (தகவல் – செய்தி)

பணமழை நேற்றுப் பெய்ததாம். (பொய்யா மொழி).